சிறப்பு நீதிமன்றம் (போக்சோ வழக்குகள்), திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்

முன்னிலை- **திரு.பெ.பார்த்தசாரதி, பி.எல்.,**

அமர்வு நீதிபதி, திருவண்ணாமலை.

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் நாள் புதன்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.77/2024**

***CNR No.TNTM1B-000252-2024***

சேட்டு, வயது 64, த/பெ. முருகேசன்,
எண்.640, குளத்துமேட்டுத் தெரு,
நவாப்பாளையம் கிராமம், கலசபாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம். ... மனுதாரா்/எதிரி

/எதிா்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்,
குற்ற எண்.13/2024 ... எதிா்மனுதாரா்/குற்றமுறையிடுபவா்

இம்மனுவானது இன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரா்/ எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.அசாருதீன் அவர்கள் முன்னிலையாகியும், எதிா்மனுதாரா்/ குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞர் திருமதி.என்.புவனேஸ்வரி அவா்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு பரிசீலித்த பின்னா், இந்நீதிமன்றம் வழங்கும்

உத்திரவு

மனுதாரா்/எதிரி தரப்பில் Section 483 of BNSS-ன்படி பிணைகோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்-** மனுதாரர் மீது *Section 137(1), 87, 65(2) of BNS 2023 and Section 6 of POCSO Act 2012*-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு 12.07.2024 அன்று எதிரி கைது செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் எந்த குற்றமும் செய்யவில்லை. மனுதாரருக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. இவ்வழக்கினை நடத்துவதற்கு மனுதாரர் வெளியில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். தவறுதலாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு எந்த குற்றமும் செய்யவில்லை. இவ்வழக்கு சம்பவம் 11.07.2024 அன்று நடந்துள்ளது. ஆனால் முதல் தகவல் அறிக்கை 12.07.2024 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை தற்போது முடிவடைந்துவிட்டதால், எதிரிக்கு பிணை வழங்கினால் எந்த விதத்திலும் பாதிக்காது. மனுதாரர் புலன் விசாரணையில் தலையிடமாட்டார். சாட்சிகளை மிரட்ட மாட்டார். நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படத் தயாராக உள்ளார். மனுதாரர் மதிப்புமிகு சொத்துக்கள் உள்ள முகவரியில் வசித்து வருவதால், தலைமறைவாகவோ, சாட்சிகளை மிரட்டவோ வாய்ப்பில்லை. மனுதாரருக்கு பிணை தர பிணைதாரர்கள் தயாராக உள்ளனர். மாண்புமிகு

மெட்ராஸ் உயர்நீதிமன்றம் உட்பட வேறு எந்த நீதிமன்றத்திலும் பிணை கோரி மனு நிலுவையில் இல்லை. எனவே, மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்கவேண்டும்.

3. <u>**அரசுத் தரப்பு ஆட்சேபணை சுருக்கம்-**</u> இந்த மனுதாரர்/எதிரி மீது *Section 127(2), 87, 65(2), 76 of BNS 2023 and Section 5(m) r/w 6(1) of POCSO Act 2012*-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, 12.07.2024 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். அரசுத் தரப்பு வழக்கானது, பாதிக்கப்பட்ட சிறுமியின் பிறந்த தேதி 21.05.2015 மற்றும் சம்பவத்தின்போது 9 வயதுடையவர். 5ம் வகுப்பு படிக்கிறார். எதிரிக்கு 64 வயது. எதிரி, சிறுமியின் வீட்டிற்கு பின்னால் ஒரு மளிகை கடை நடத்தி வருகிறார். 11.07.2024 அன்று மாலை 5.30 மணிக்கு சிறுமி தெருவில் விளையாடிக்கொண்டிருந்தபோது, எதிரி பிஸ்கட் தருவதாக அவரிடம் வருமாறு அழைத்து சிறுமியை அவரது வீட்டிற்குள் கடத்திச்சென்று கதவை மூடி சிறுமியின் ஆடைகளை களைந்து சிறுமியின் பிறப்புறுப்பில், எதிரியின் பிறப்புறுப்பை நுழைத்து பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை முடிந்து குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. ஏற்கனவே பிணை கோரி தாக்கல் செய்த பிணை மனு எண்.69/ 2024ஆனது 10.09.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. தற்போது வழக்கின் சூழ்நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிரி மிகக் கொடூர குற்றம் செய்துள்ளதால், எதிரியை பிணையில்விட்டால், சிறுமியை மிரட்டியும், சாட்சிகளை மிரட்டி கலைத்துவிடுவார். இதனால் புலன் விசாரணை பாதிக்கக்கூடும். எதிரி தலைமறைவாகி விடுவார். எனவே, மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர் எந்த குற்றமும் செய்யவில்லை. மனுதாரர் கடந்த 12.07.2024 அன்று கைது செய்யப்பட்டு 75 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். இவ்வழக்கின் புலன் விசாரணை முடிந்துவிட்டது. மனுதாரர் நிரந்தர முகவரி உடையவர். நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார். எனவே, எதிரிக்கு பிணை வழங்கவேண்டும் என்று வாதிடப்பட்டது.

5. அரசுத் தரப்பில், இவ்வழக்கின் புலன் விசாரணை முடிந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பிணை கோரி தாக்கல் செய்த பிணை மனு எண்.69/ 2024ஆனது 10.09.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. தற்போது வழக்கின் சூழ்நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிரி மிகக் கொடூர குற்றம் செய்துள்ளதால், எதிரியை பிணையில்விட்டால், தலைமறைவாகி விடுவார். சிறுமியையும், சாட்சிகளையும் மிரட்டி கலைத்துவிடுவார். எனவே, எதிரிக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்படுவதாக வாதிடப்பட்டது.

6. <u>**பிரச்சனை-**</u> இந்நிலையில் இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய சங்கதி என்னவெனில், மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

7. <u>**தீர்வு-**</u> இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி கடந்த 12.07.2024 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 75 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். இவ்வழக்கின் எதிரிக்கு 64 வயது. பாதிக்கப்பட்ட குழந்தைக்கு 9 வயது. எதிரி பாதிக்கப்பட்ட குழந்தையின் வீட்டிற்கு முன்னால் மளிகை கடை வைத்திருக்கிறார். பாதிக்கப்பட்ட குழந்தை குவிமுச பிரிவு 164 வாக்குமூலத்தில், "11.07.2024ந்தேதி எதிர்வீட்டு தாத்தா சேட்டு என்னை கையை

பிடித்து இசுத்துட்டு ரூமுக்குள்ள போனாரு. என் டிரஸ் எல்லாம் கழட்டிட்டு பெட் மேல படுக்க வச்சி அவரு யூரின் போற இடத்த, நான் யூரின் போற இடத்துல வச்சாரு" என்று சொல்லியுள்ளார். அரசுத் தரப்பில், ஏற்கனவே பிணை கோரி தாக்கல் செய்த பிணை மனு எண்.69/2024ஆனது 10.09.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், தற்போது வழக்கின் சூழ்நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று வாதிட்டுள்ளதைக் கருத்திற்கொண்டும், இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மையைக் கருத்திற்கொண்டும், நீதியின் நலனைக் கருத்திற்கொண்டு மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று முடிவு செய்கிறேன்.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2024.09.25 17:25:34 +0530

அமர்வு நீதிபதி,
சிறப்பு நீதிமன்றம் (போக்சோ வழக்குகள்)
திருவண்ணாமலை.

நகல்

1. காவல் ஆய்வாளர், போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்
2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்